# செயலாற்றுகை அறிக்கை - 2023

செலவினத் தலைப்பு - 296

## இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)த் திணைக்களம்

**நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு**

## கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் செய்தி



நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் கீழுள்ள 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தினால் நிறுவப்பட்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் 2023 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கையை வெளியிடும் இச் சந்தர்ப்பத்தில் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் என்ற வகையில் இச் செய்தியை மிகவும் பெருமையுடன் வெளியிடுகிறேன்.

இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்திற்கமைய இந்நாட்டின் பாதுகாப்பு, பொருளாதாரம், பொது சுகாதாரம், சுற்றுச் சூழல் பாதுகாப்பு என்பவற்றை கருத்திற் கொண்டு நிலைபேறான அபிவிருத்தியடைந்த ஓர் நாட்டிற்காக இறக்குமதி மற்றும் ஏற்றுமதி நடைமுறைகளை ஒழுங்குபடுத்தல் என்ற “செயற்பணி” இனால் திணைக்களத்தை வழிநடாத்த 2023 வருடத்தில் புதியதோர் தூரநோக்கை தயார் செய்து அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேற்படி பலதரப்பட்ட பொறுப்புக் கடமைகளை நடைமுறைப்படுத்துவதற்காக அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்கள் சந்தர்ப்பத்திற்கேற்ப அமைச்சின் செயலாளரின் ஆலோசனைகள் மற்றும் மேற்பார்வையின் கீழ் கௌரவ நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரின் அனுமதியின் கீழ் வெளியிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

இலங்கையின் பொருளாதாரமானது பிரதானமாக இறக்குமதியை முன்னிலைப்படுத்தி கட்டியெழுப்பப்பட்ட வணிகப் பின்னணியைக் கொண்டதனால், பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக இறக்குமதிப் பொருட்களின் தரம் மற்றும் அளவு அடிப்படையில் விசேடமாக முடிவுப் பொருட்கள் மற்றும் நுகர்வுப் பொருட்களுக்கு இந்நாட்டிற்குள் பயன்பாட்டின் சிக்கன அளவிற்கமைய ஒரு சில இறக்குமதிக் கட்டுப்பாடுகள் விதித்தல் அல்லது கட்டுப்படுத்தல் அல்லது இடைநிறுத்தல் அல்லது தடை செய்தல் சம்பந்தமாக இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகளை வெளியிடுவதற்கு நடவடிக்கைகள் பல எடுக்க 2023 ஆம் ஆண்டின் முதற் காலாண்டில் இத் திணைக்களத்திற்கு நேர்ந்தது.

மேற்படி இறக்குமதிக் கட்டுப்பாடுகளை விதித்தல், உள்நாட்டு பொருளாதாரத்தில் செலுத்தும் சாதகமான நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு, இந் நாட்டின் வர்த்தக சமூகத்தின் தேவையை கருத்திற் கொண்டு, பொருள் உற்பத்திகளுக்கு வசதிகளை செய்து கொடுத்து இந்நாட்டின் கைத்தொழிலாளர்களுக்கு மற்றும் தொழில் முனைவோருக்கு வசதிகளை வழங்கும் நோக்கில் 2023 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில், இலங்கை மத்திய வங்கி, நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு மற்றும் வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கை திணைக்களத்துடன் பேச்சுவார்த்தை நடத்திப் படிப்படியாக தளர்த்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதற்கமைய, 2023 ஆம் ஆண்டின் இறுதியின் போது 03 கட்டங்களில் வர்த்தமானிகள் வெளியிடப்பட்டு இறக்குமதித் தற்காலிகத் தடைகளைத் தளர்த்தியமையானது இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் சம்பந்தமாக எடுக்கப்பட்ட மிகப் பெரும் பணியாக அமைந்தது.

மேலும், சர்வதேச வர்த்தகத்தில் மிக முக்கியமான விடயமொன்றான இறக்குமதியாளர்கள் பயன்படுத்துகின்ற கொடுப்பனவு முறைகளினால் இந்நாட்டின் பொருளாதார செயற்பாட்டு முறைமையில் ஏற்படுத்தும் தடுப்பு விளைவுகளை சமநிலையோடு பகுப்பாய்வு செய்து விடய நிறுவனங்களின் வழிகாட்டுதல்களுடன் அதுவரை காணப்பட்ட கொடுப்பனவு முறைகளை ஒழுங்குபடுத்துவதற்கு பங்களிப்பு செய்தமையும் இந்நாட்டு குடிமக்களை அனைத்து விதமான பொருளாதாரக் கட்டமைப்பிலும் பாதுகாப்பதற்காக இத் திணைக்களத்தினால் எடுக்கப்பட்ட சூழ்நிலைக்கேற்ற மிக முக்கியமான நடவடிக்கையொன்றாகும்.

திணைக்களத்தின் விடயப் பரப்பில் மிகுந்த உணர்வுபூர்வமாகவும் வினைத்திறனாகவும் பணியாற்றுவதற்காக திணைக்களத்தின் அனைத்து நிலை அலுவலர்களுக்கும் விடயங்கள் சார்ந்த பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், அலுவலக நோக்கை விரிவாக்கி பிரிவுகள் மற்றும் அலகுகள் சிலவற்றுக்குப் பொருத்தமான இடங்களை நிறுவி திணைக்களத்தின் மனித வள மற்றும் பௌதீக வள அபிவிருத்தி மீது விசேட கவனம் செலுத்தப்பட்டது. அத்துடன், திணைக்களத்திற்கு வருகை தரும் சேவை பெறுநர்களுக்கு

வசதியாக ஒவ்வொரு அலகுகளினதும் விடயங்களுக்கும் தனித்தனியாக சேவைக் கருமபீடங்களை நிறுவியமையும் மற்றும் கருமபீடங்களுக்கு வெவ்வேறு அலுவலர்களை நியமித்தமையும் திணைக்களம் பெற்ற வெற்றிகரமான செயற்பாடொன்றாகும்.

இனங்காணப்பட்ட நிலையான அபிவிருத்தி இலக்குகளோடு திணைக்களத்தினால் தமது நோக்கம் மற்றும் செயற்பணிகளை கொண்டு செல்வதற்கு நிலையாக மற்றும் ஒழுங்காக நடத்துவதற்கு புதிய தொழில்நுட்பத்துடன் திணைக்களத்தின் நிகழ்நிலை கணனி முறைமையை புதுப்பித்தலும் அதனூடாக உலகின் அபிவிருத்தியடைந்த நாடுகளின் தொழில்நுட்ப முறைமைகளைப் போன்றதோர் வெளியீட்டைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, அமெரிக்க அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் எஸ்தோனிய அரசினால் உருவாக்கப்பட்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதி உரிமங்களை வழங்கும் நிகழ்நிலை கணனி முறைமையை திணைக்களத்திற்குப் பெற்றுக் கொண்டது 2023 ஆம் ஆண்டில் பெற்றுக் கொள்ளப்பட்ட மாபெரும் வெற்றியாகும். தற்போது திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள் உரிய கால எல்லையில் மிகவும் வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ளதையும் குறிப்பிடுகின்றேன்.

எதிர்காலத்தில் இத்திணைக்களத்தின் பணிகளை மேலும் செயற்திறனாக மேற்கொள்வதற்கு திணைக்களத்தின் பணிக்குழுவினர் மற்றும் திணைக்களத்தின் நடைமுறைகளை அவதானித்து மேலும் மேம்படுத்துவதற்கு பல வேலைத்திட்டங்கள் திட்டமிட்டுள்ளதுடன் அவற்றிற்கு கால எல்லைகளும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

முழுவதுமாக, 2023 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட செயற்திறனான இலக்குகளை அடைந்து, திணைக்களத்தின் நோக்கிற்காக படிப்படியாக அடியெடுத்து வைப்பதில் நிறைவேற்று அலுவலர்கள் உள்ளிட்ட அனைத்து பணிக்குழுவினரும் வழங்கிய பங்களிப்பை இச் சந்தர்ப்பத்தில் நன்றியோடு ஞாபகமூட்டுகிறேன்.

மேலும், இச் சவாலான காலப்பகுதியில் நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சினால் கிடைக்கும் வழிகாட்டல்கள் கருத்திற் கொள்ளப்பட வேண்டும். அதேபோல், இத் திணைக்களத்தின் பணிகளோடு நேரடியாக தொடர்புபடும் இலங்கை மத்திய வங்கி, இலங்கை சுங்கத் திணைக்களம் மற்றும் இலங்கையின் வணிக வங்கி முறைமை, ஏனைய பரிந்துரை வழங்குகின்ற அமைச்சுக்கள், திணைக்களங்கள், நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளின் உதவிகளையும் நன்றியுடன் குறிப்பிடுகின்றேன்.

1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான சட்டரீதியான கட்டமைப்பிற்குள் அரசின் பொருளாதாரக் கொள்கைகளுக்கு இணங்கி தனியார்த் துறையினரை அதிகமாகக் கொண்ட சேவைபெறுநர்களின் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்யும் விதமாக இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தை வழிநடத்தி மிகவும் செயற்திறனான மற்றும் வினைத்திறனான சேவைகளை வழங்குவதற்கு அர்ப்பணிப்போடு செயற்பட திணைக்களத்தின் அனைவரும் இணைந்து கொள்வோம்.

**டீ.டீ. உபுல்மலீ பிரேமதிலக்க**
இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகம்

# உள்ளடக்கம்


1 **அத்தியாயம் - நிறுவனத்தின் சுயவிபரம் / செயற்படுத்தப்படுத்தப்படுவதன் சாராம்சம்** 01

1.1 அறிமுகம் 01

1.2 திணைக்களத்தின் செயற்பணி, தூரநோக்கு மற்றும் நோக்கங்கள் 02

1.3 திணைக்களத்தின் பொறுப்புக்கள் மற்றும் பணிகள் 03

1.4 ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு 04

2 **அத்தியாயம் - முன்னேற்றம் மற்றும் முன்னோக்குப் பார்வை** 08

2.1 பொருட்கள் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி ஒழுங்குபடுத்தல் சம்பந்தமாக கொள்கை ரீதியான உத்தரவுகள் 02

2.2 இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டு அனுமதிப் பத்திரங்களை வழங்குதல். 15

2.3 கடந்த 5 வருட காலத்திற்குள் விநியோகிக்கப்பட்ட அனுமதிப் பத்திரங்கள் தொடர்பான தகவல 23

2.4 இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிக் கொடுப்பனவுகள் முறைகள் மற்றும் கட்டளைகள் 25

2.5 இலங்கையில் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி ஒழுங்குபடுத்தல் மற்றும் வசதியளித்தல் 27

2.6 புதிய மேம்படுத்தல்கள் 30

2.7 இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டு திணைக்களத்தில் நிறுவப்படவுள்ள STRATLINK கணினி மென்பொருள் அமைப்பு. 31

3 **அத்தியாயம் - வருடத்திற்கான முழு நிதி செயலாற்றுகை** 33

3.1 2023 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று 33

3.2 2023 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிக்கான நிதி நிலைமைகள் தொடர்பான கூற்று 34

3.3 2023 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைகின்ற ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று 35

3.4 வருமான சேகரிப்பின் செயலாற்றுகை 36

3.5 2023 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளைப் பயன்படுத்திக் கொள்வதன் செயலாற்றுகை 37

3.6 நி.பி.208 பிரகாரம், ஏனைய அமைச்சுக்கள்/திணைக்களங்களின் பிரதிநிதியாக இத்திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகள் 37

3.7 நிதியல்லாத சொத்துக்களின் அறிக்கையிடலின் செயலாற்றுகை 37

3.8 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 38

| | | |
|---|---|---|
| **4** | **அத்தியாயம் - செயலாற்றுகைக் குறியீடு** | **46** |
| 4.1 | நிறுவனத்தின் செயலாற்றுகைக் குறியீடு (செயலாற்றுகைத் திட்டத்தின் அடிப்படையிலானது) | 46 |
| **5** | **அத்தியாயம் - நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் (SDG) அடைவுகளுக்கான செயலாற்றுகை** | **46** |
| 5.1 | இனங்காணப்பட்ட நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் | 47 |
| 5.2 | நிலையான அபிவிருத்தி இலக்கினைப் அடைவதற்கான வெற்றிகள் மற்றும் சவால்கள் | 51 |
| **6** | **அத்தியாயம் - மனித வள சுயவிபரம்** | **51** |
| 6.1 | பணியாளர்களின் எண்ணிக்கை முகாமைத்துவம் | 51 |
| 6.2 | திணைக்களத்தின் செயலாற்றுகையினை முன்னிட்டு மனித வளத் தட்டுப்பாடு அல்லது மேலதிகத்தின் அச்சுறுத்தல் | 52 |
| 6.3 | மனித வள அபிவிருத்தி | 52 |
| **7** | **அத்தியாயம் - இணக்கப்பாட்டு அறிக்கை** | **57** |
| **முடிவுரைக் குறிப்பு** | | **65** |

# 1 அத்தியாயம் - நிறுவனத்தின் சுயவிபரம் / செயற்படுத்துவதன் சாராம்சம்

## 1.1 அறிமுகம்

கி.பி. பத்தாம் நூற்றாண்டில் IV ஆம் உதய மன்னனின் காலம் வரையான நீண்ட வரலாறொன்றைக் கொண்ட பாதுகாப்பு மற்றும் தரத்துடனான இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகள், 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு நிறுவப்பட்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் மிகவும் ஒழுங்கான மற்றும் சர்வதேச வர்த்தகத்திற்குப் பொருத்தமான முறையில் சர்வதேச வர்த்தகத்திற்கு வசதிகளையளிக்கும் செயற்பாடு வரை வளர்ந்துள்ளது. அதற்கமைய, கடந்த கால பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு, இலங்கை மத்திய வங்கி மற்றும் ஏனைய உரிய தரப்பினரின் கருத்துக்கள், முன்மொழிவுகள், கண்காணிப்புகள் மற்றும் ஆலோசனைகளுடன் ஒன்றிணைந்து சந்தர்ப்பத்திற்கேற்றவாறு சம்பிரதாய முறையிலிருந்து விடுபட்டு மூலோபாயத்தின் மூலம் குறித்த சட்டத்தின் அதிகாரங்களுக்கமைய இறக்குமதி கட்டுப்பாடுகள் விதித்தல் மற்றும் கொடுப்பனவு முறைகளைக் கட்டுப்படுத்துவதனால் சிறப்பான பணியொன்றை செய்துள்ள இத் திணைக்களமானது அந்நெருக்கடி நிலையைக் குறைப்பதற்கான ஆக்கபூர்வமான விடயங்களில் கவனம் செலுத்தி, விதிக்கப்பட்ட அடிப்படை இறக்குமதிக் கட்டுப்பாடுகள் பலவற்றை நீக்கியுள்ளது. அதற்காக மேலதிகமாக அதிவிசேட வர்த்தமானிகள் பல வெளியிடுவதற்கு 2023 ஆம் ஆண்டில் இத்திணைக்களம் நடவடிக்கை எடுத்தது.

தேசிய பாதுகாப்பு, சுற்றுச் சூழல் பாதுகாப்பு, சிறந்த சுகாதாரம் மற்றும் பொருளாதாரப் பாதுகாப்பு என்பவற்றை இழக்காது இறக்குமதி மற்றும் ஏற்றுமதிப் பொருட்களின் எண்ணிக்கை மற்றும் தரத்திற்காக இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு உரிமங்களை வழங்கும் முறையை மிகவும் செயற்திறனாக மற்றும் வினைத்திறனாக சேவைபெறுனர்கள் திருப்தியடையும் விதமாக மேற்கொள்வதற்கு அனைத்து நடவடிக்கைகளும் இத்திணைக்களத்தினால் எடுக்கப்பட்டுள்ளன. அங்கு பாஸல், மொன்ட்ரியல் உள்ளிட்ட சுற்றுச் சூழல் சம்பந்தமான சர்வதேச பிரகடனங்களுக்கு இணங்கி உரிய இறக்குமதிக் கட்டுப்பாடுகள் செய்யப்படுவதுடன், பொருட்கள் இறக்குமதியின் போது அவற்றின் தரத்தை நிர்ணயம் செய்தலூடாக மக்களின் சுகாதாரத்தைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளும் விதிக்கப்பட்டுள்ளன. அதன்படி, 123 இறக்குமதிப் பொருட்களுக்கு இலங்கைத் தரநிலைகள் கட்டாயமாகும். அதற்கு மேலதிகமாக பாதுகாப்பை கருத்திற் கொள்ளும் போது ஐக்கிய நாடுகளின் 1540 ஆம் முன்மொழிவிற்கு இணங்க புதிய சட்டதிட்டங்களை தயாரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டில் உரிமங்களை வழங்குதல் மற்றும் பற்று வைத்தல் உட்பட, ஏனைய செயற்பாடுகளுக்கு புதிய நிகழ்நிலை முறையொன்றை அறிமுகப்படுத்துவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் இவ்வாண்டில் திட்டமிடப்பட்டுள்ளது. அதன் மூலம் மிகவும் செயற்திறனான மற்றும் வினைத்திறனான சேவையொன்றை மக்களுக்கு வழங்குவதற்கு முடியுமாகுமென எதிர்ப்பார்க்கிறேன்.

## 1.2 திணைக்களத்தின் தூரநோக்கு, செயற்பணி மற்றும் நோக்கங்கள்

### 1.2.1 தூரநோக்கு

நிலைபேறான அபிவிருத்தியடைந்த ஓர் நாட்டை நோக்கி இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகளை ஒழுங்குபடுத்தல்

### 1.2.2 செயற்பணி

**நாட்டின் பாதுகாப்பு, பொருளாதாரம், பொது சுகாதாரம், சூழல் பாதுகாப்பு போன்ற அனைத்தையும் கவனத்திற் கொண்டு, பொருட்கள் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் தொடர்பில் அரசினால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்ற கொள்கை ரீதியான தீர்மானங்களை 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கம் கொண்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாடுச் சட்டத்தின் பிரகாரம் நடைமுறைப்படுத்தல்**

### 1.2.3 நோக்கங்கள்

நாட்டின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல், பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் பொது சுகாதாரம் மற்றும் சூழலைப் பாதுகாப்பதற்காக அரசினால் அவ்வப்போது எடுக்கப்படுகின்ற கொள்கைத் தீர்மானங்களுக்கு இணங்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகளை ஒழுங்குபடுத்தல்.

## 1.3 திணைக்களத்தின் பொறுப்புக்கள் மற்றும் பணிகள்

i. இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டிற்கு உரிய ஒழுங்குவிதிகள் உள்ளடக்கிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிடல்.

ii. இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டிற்கு உரிய செயற்பாட்டு வழிகாட்டல்களை வணிக வங்கிகளுக்கு, இலங்கை சுங்கத்திற்கு மற்றும் பிற நிறுவனங்களுக்கு வழங்கல்.

iii. இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் சம்பந்தமாக வெளியிடப்படுகின்ற ஒழுங்குவிதிகளுக்கு உரிய உள்ளக சுற்றறிக்கைகளை வெளியிடல்.

iv. இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளின் கீழ் இந்நாட்டு பொருளாதாரத்தின் நன்மையினைக் கருத்திற் கொண்டு இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு உரிமங்களை வழங்குதல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்.

v. உரிமக் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட பொருட்களை இறக்குமதி செய்த பின்னர் பற்றுக்களை (Debit) வழங்குதல்.

vi. இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள், அல்லது உரிமங்களின் நிபந்தனைகளை மீறும் இறக்குமதியாளர்களுக்கு மேலதிகக் கட்டணங்களை விதித்தல்.

vii. மூலோபாய வர்த்தக முகாமைத்துவ முறையொன்றை மற்றும் தரத்திலான இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு உரிமங்களை வழங்கும் முறையொன்றை உருவாக்குவது தொடர்பில் உரிய அரச நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயற்படல்.

viii. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகத்தினை மேம்படுத்துவதற்காக உலக வர்த்தக சங்கத்தின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு வசதிகளைச் செய்து கொடுத்தல்.

ix. பாஸல் மாநாடு, மொன்ரியல் மாநாடு போன்ற சர்வதேச மாநாடுகளுக்கு இணங்குவதற்கு சுற்றாடல் அமைச்சுடன் இணைந்து செயற்படல்.

x. சர்வதேச வர்த்தகரீதியான கொடுக்கல் வாங்கல்களுக்கு பொருத்தமான ஒழுங்குவிதிகளை வெளியிடல் மற்றும் ஒழுங்குபடுத்தல்.

xi. இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் தொடர்பில் பிரச்சினைகள் தோன்றுகின்ற சந்தர்ப்பங்களில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு தேவையான உதவிகள் / ஆலோசனைகளை வழங்கல்.

xii. திணைக்களப் பணியாளர்களின் திறமைகள், திறன்கள் மற்றும் வினைத்திறனை மேம்படுத்துவதற்கு பயிற்சி நிகழ்வுகளை நடத்துதல் மற்றும் ஊழியர் நலன்புரி.

xiii. உரிய அரச கட்டணங்களைச் சேகரித்து, ஒழுங்கிணைந்த நிதிக்கு வைப்புச் செய்தல்.

## 1.4 ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு

நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் கீழ் இயங்குகின்ற இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகம் நிறுவனத் தலைவராகக் கடமையாற்றுகிறார்.

1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு சட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் சட்டதிட்டங்கள், ஒழுங்குவிதிகளை விதித்தல் மற்றும் இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமங்களை வழங்குதல் உள்ளிட்ட ஒட்டுமொத்த இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் துறையின் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்காக இத் திணைக்களம் கீழ்வரும் பிரிவுகள் மற்றும் அலகுகளின் அடிப்படையில் இயங்குகின்றது.

I. நிறுவனப் பிரிவு
II. கணக்குப் பிரிவு
III. ஆய்வுகள் மற்றும் கொள்கைகள் பிரிவு
IV. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு
V. அனுமதிப் பத்திரங்களை விநியோகிக்கும் பிரிவுகள்
    - அலகு 1 – ஔடதங்கள் மற்றும் சத்திர சிகிச்சை உபகரணங்கள்
    - அலகு 2 – பாவிக்கப்பட்ட வாகனங்கள் மற்றும் வாகன உதிரிப் பாகங்கள்
    - அலகு 3 – இரசாயனப் பொருட்கள், உரங்கள், பூச்சிக்கொல்லிகள் மற்றும் தொழில்நுட்ப மூலப்பொருட்கள்
    - அலகு 4 – கையடக்கத் தொலைபேசிகள், தொலைத் தொடர்பு சாதனங்கள் மற்றும் வேறு மின் உபகரணங்கள்
    - அலகு 5 – விலங்குகள், விலங்கு உற்பத்திகள் மற்றும் ஏனைய இறக்குமதிகள்

VI. தகவல் தொழிநுட்பப் பிரிவு

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் தற்போதைய ஊழியர்கள் பின்வரும் நிறுவன விளக்கப்படத்தின் (organization Chart) கீழ் வாடிக்கையாளர்களுக்கு தொடர்ந்தும் இக் கடமைகளை செயற்திறன் மற்றும் வினைத்திறனான முறையில் நிறைவேற்றுவதற்காகவும் சேவை செய்வதற்காகவும் அர்ப்பணிக்கப்பட்டுள்ளனர்.

2023.12.31 ஆம் திகதிக்கு அனுமதிக்கப்பட்ட பணிக்குழுவினர் 122 ஆக இருப்பதுடன், சிரேஷ்ட நிலையிலிருந்து ஆரம்ப நிலைவரை 17 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், தற்போதுள்ள பணிக்குழுவினரைக் கொண்டு மிகவும் சிறப்பானதோர் சேவையை வழங்குவதற்கு 2023 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டது.


பணிக்குழுவினர் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

## 2023.12.31 ஆம் ஆண்டின் ஊழியர் தொடர்பான தகவல்கள்

| பதவி நிலை | சேவை/தரம் | | | | அனுமதிக்கப்பட்ட ஊழியர் | தற்போதைய ஊழியர் | வெற்றிடம் |
|---|---|---|---|---|---|---|---|
| **சிரேஷ்ட நிலை** | | | | | | | |
| இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் நாயகம் | SLAS | விஷேட | SL 3 | நிறைவேற்றுத் தரம் | 01 | 01 | 00 |
| இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் | SLAS | I | SL 1 | நிறைவேற்றுத் தரம் | 02 | 02 | 00 |
| இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் (தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பம்) | All Island Service | 1 | SL1 | நிறைவேற்றுத் தரம் | 01 | 01 | 00 |
| பிரதி/உதவி கட்டுப்பாட்டாளர் | SLAS | II/III | SL 1 | நிறைவேற்றுத் தரம் | 06 | 04 | 02 |
| பிரதான கணக்காளர் | SLAcS | I | SL 1 | நிறைவேற்றுத் தரம் | 01 | 01 | 00 |
| பிரதான உள்ளக கணக்காய்வாளர் | SLAcS | I | SL 1 | நிறைவேற்றுத் தரம் | 01 | 01 | 00 |
| சட்ட அலுவலர் | திணைக்களம் சார்ந்த | II/III | SL 1 | நிறைவேற்றுத் தரம் | 01 | 00 | 01 |
| உதவிப் பணிப்பாளர் (தகவல் தொழிநுட்பம்) | SLICTS | III | SL 1 | நிறைவேற்றுத் தரம் | 01 | 01 | 00 |
| | | | | | **14** | **11** | **03** |
| **மூன்றாம் நிலை** | | | | | | | |
| நிர்வாக அலுவலர் | MSOS | அதி | MN 7 | மூன்றாம் தரம் | 01 | 01 | 00 |
| மொழிபெயர்ப்பாளர் | TS | I/II | MN 6 | மூன்றாம் தரம் | 02 | 02 | 00 |
| தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப அலுவலர் | SLICTS | II | MN 6 | மூன்றாம் தரம் | 01 | 01 | 00 |
| | | | | | **04** | **04** | **00** |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **இரண்டாம் நிலை** | | | | | | | |
| தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப உதவியாளர் | SLICTS | III | MT 1 | **இரண்டாம் தரம்** | 02 | 01 | 01 |
| தரவு முகாமைத்துவ உதவியாளர் | திணைக்களம் சார்ந்த | | MN 4 | இரண்டாம் தரம் | 01 | 01 | 00 |
| விசாரணை உதவியாளர் | திணைக்களம் சார்ந்த | | MN 4 | இரண்டாம் தரம் | 01 | 01 | 00 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | D.O.S | I/II/III | MN 4 | இரண்டாம் தரம் | 23 | 22 | 01 |
| முகாமைத்துவ உதவியாளர் | Mg.S.O.S | I/II/III | MN 2 | இரண்டாம் தரம் | 57 | 50 | 07 |
| | | | | | **84** | **75** | **09** |
| **ஆரம்ப நிலை** | | | | | | | |
| வாகன ஓட்டுனர் | வாகன ஓட்டுனர் சேவை | I/II/III | PL 3 | முதல் தரம் | 05 | 03 | 02 |
| அலுவலக உதவியாளர் | அலுவலக உதவியாளர் சேவை | I/II/III | PL 1 | முதல் தரம் | 15 | 12 | 03 |
| **முதல் தரம்** | | | | | **20** | **15** | **05** |
| **மொத்தம்** | | | | | **122** | **105** | **17** |

# ஒழுங்கமைப்பு அட்டவணை




உ.க - உதவிக் கட்டுப்பாட்டாளர்
அ.உ - அபிவிருத்தி உத்தியோகத்தர்
த.தொ.தொ - தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பம்
பி.க - பிரதிக் கட்டுப்பாட்டாளர்
த.மு.உ - தரவு முகாமைத்துவ உதவியாளர்
நி.அ - நிருவாக அலுவலர்
உ.ப - உதவிப் பணிப்பாளர்
வி.உ - விசாரணை உதவியாளர்
பி.மு.சே.அ- பிரதான முகாமைத்துவ சேவை அலுவலர்
ஆ மற்றும் கொ - ஆய்வு மற்றும் கொள்கை
மு.சே.அ - முகாமைத்துவ சேவை அலுவலர்

# 2. அத்தியாயம் - முன்னேற்றம் மற்றும் முன்னோக்குப் பார்வை

## 2.1 பொருட்கள் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி ஒழுங்குபடுத்தல் சம்பந்தமாக கொள்கை ரீதியான உத்தரவுகள்

கொவிட்-19 உலகளாவிய தொற்றுநோயுடன் ஏற்பட்ட நிதி நெருக்கடி 2021, 2022 ஆம் ஆண்டுகளில் தொடர்ந்து காணப்பட்டதுடன், அதன் காரணமாக இலங்கையின் பொருளாதாரம் மிகவும் வேகமாக பின்நோக்கி சென்றது. விசேடமாக அதன் விளைவொன்றாக அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி தொடர்ந்து வீழ்ச்சியடைந்தது. இப் பொருளாதார நெருக்கடி நிலைமையை சமாளித்து அதனை எதிர்கொள்வதற்கு அவசியமான முக்கிய நடவடிக்கைகள் 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் இனங்காணப்பட்டன. இதில், இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளினால் விசேடமாக 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் அத்தியவசியமற்ற பொருட்களை இலங்கைக்கு இறக்குமதி செய்வதை தற்காலிகமாக தடை செய்தல், கொடுப்பனவு முறைகளை ஒழுங்குபடுத்துவதற்கான ஒழுங்குவிதிகளின் மூலம் திறந்த கணக்கின் கீழான இறக்குமதிக்கான கொடுப்பனவுகளை முழுமையாக தடை செய்ததுடன், மீள் ஏற்றுமதியாளர்களான இறக்குமதியாளர்கள் மற்றும் உள்நாட்டு கைத்தொழிலாளர்கள் அக்கட்டுப்பாடுகளிலிருந்து நீக்கப்பட்டனர். எவ்வாறாயினும், அரசினால் பின்பற்றப்படுகின்ற பல்வேறு பொருளாதார முகாமைத்துவ முறைமைகளினால் மீண்டும் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாய் படிப்படியாக சாதாரண நிலைக்கு திரும்புதல் ஆரம்பமானதுடன் 2023 ஆம் ஆண்டிலிருந்து படிப்படியாக நாட்டின் பணவீக்க விகிதம் குறைந்து கடன் கொடுப்பனவிற்கான அழுத்தம் குறைந்து மூலதனப் பொருட்களுக்கான முதலீடுகள் படிப்படியாக அதிகரித்த காரணத்தினால் பொருளாதாரம் வளர்ச்சிப் பாதையை நோக்கி சென்றது. அதன்படி, அதுவரை விதிக்கப்பட்டிருந்த இறக்குமதிக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது 2023 ஆம் ஆண்டில் பிரதான நடவடிக்கையாக எடுக்கப்பட்டது.

அதன்போது, இலங்கை மத்திய வங்கியின் அந்நிய செலாவணி இருப்பு அதிகரித்தமையும், அதற்கமைய அதிகாரமளிக்கப்பட்ட வணிக வங்கிகளுக்குத் தேவையான அமெரிக்க டொலர் தொகையை வழங்குவதையும் காரணமாகக் கொண்டு அவ் இறக்குமதிகளுக்கான கொடுப்பனவுகளை செய்வதற்கு வணிக வங்கிகளுக்கு உள்ள இயலுமையைக் கருத்திற் கொண்டு, 2023 ஆம் ஆண்டில் பல கட்டங்களின் கீழ் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானிகளினால் (வாகனங்கள் தவிர்ந்த) இறக்குமதிப் பொருட்கள் மீது விதிக்கப்பட்டிருந்த தற்காலிக இறக்குமதித் தடைகள் முழுமையாக நீக்கப்பட்டன. 2023 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இலங்கை சுங்கம் மற்றும் வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களத்துடன் இணைந்து வெளியிட்ட 2023.01.01 ஆம் திகதிய 2312/75 ஆம் இலக்க வர்த்தமானிக்கு அமைவாக இத்திணைக்களத்தினால் இறக்குமதிக் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட பொருட்களுக்கான புதிய இயைபு முறைக் குறியீடுகள் அடங்கிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்கள் 2023 சனவரி மாதம் 01 ஆம் திகதி வெளியிடப்பட்டன. அவ் வர்த்தமானியில், இறக்குமதி உரிமத்திற்கு உட்படுத்தப்பட்ட 1051 (HS Codes) பொருட்களும், முழுமையாக இலங்கைக்கு இறக்குமதி செய்வதற்கு தடை செய்யப்பட்ட 49 (HS Codes) பொருட்களும், மறு அறிவித்தல் வரை இறக்குமதி உரிமங்களை வழங்குவதற்கு நிறுத்தப்பட்ட 504 (HS Codes) பொருட்களும் மற்றும் மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக தடை விதிக்கப்பட்ட 1218 (HS Codes) பொருட்களும் வெளியிடப்பட்டன.

**2.1.1** இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் புதிய ஒழுங்குவிதிகளை வழங்குதல்.

| தொடர் இல | அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இல | திகதி | விபரம் |
|---|---|---|---|
| 1 | 2312/77 | 2023.01.01 | 2022 ஆம் ஆண்டில் உலக சுங்க அமைப்பினால் அறிமுகப்படுத்தப்பட்ட இயைபு முறைக் குறியீடுகளின் (எச்.எஸ்) ஏழாவது பதிப்பிற்கு இணங்க இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமப் பொருட்பட்டியல், தடை செய்யப்பட்ட பொருட்பட்டியல் மற்றும் இறக்குமதி கட்டுப்பாட்டு உரிமங்களை வழங்கல். தற்காலிகக் தடை பொருட்பட்டியல் புதுப்பிக்கப்பட்டு ஒன்றிணைத்தல். |
| 2 | 2312/78 | 2023.01.01 | 2022 ஆம் ஆண்டில் உலக சுங்க அமைப்பினால் அறிமுகப்படுத்தப்பட்ட இயைபு முறைக் குறியீடுகளின் (எச்.எஸ்) ஏழாவது பதிப்பிற்கு இணங்க இறக்குமதித் தற்காலிகத் தடைப் பட்டியலை புதுப்பித்து ஒன்றிணைத்தல். |
| 3 | 2315/46 | 2023.01.19 | கோதுமை மா, திறந்த கணக்கு / பொருட்களை விற்பனை செய்த பின்னர் பணம் செலுத்தும் முறை ஆகிய கொடுப்பனவு முறைகளின் கீழ் இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கிய கால எல்லையை 2023 சனவரி 31 ஆம் திகதி வரை நீடித்தல். |
| 4 | 2320/46 | 2023.02.22 | திறந்த கணக்குக் கொடுப்பனவு முறையின் கீழ் அரசு அனுமதித்த வேலைத்திட்டங்கள் / அபிவிருத்தித் திட்டங்களுக்கு வேலைத்திட்டப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு பரிந்துரை செய்யும் பொறுப்பை மின்வலு, குடிநீர், பெருந்தெருக்கள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு வழங்க அனுமதியளித்தல் |
| 5 | 2320/47 | 2023.02.22 | இறக்குமதி தற்காலிகமாக தடைசெய்யப்பட்டிருந்த அழகுசாதனப் பொருட்களை (15 HS Codes) முன்னைய இறக்குமதிகளின் (05 வருட) சராசரி மதிப்பில் (சீ.ஐ.எப்) 50% இற்கு கட்டுப்படுத்தி ஒரு வருடத்திற்கு இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கல். |
| 6 | 2324/45 | 2023.03.24 | இலங்கை சுங்கத்தின் உற்பத்திப் பிணைப்பு வசதியின் கீழ், பூட்டுதலில்லா நிறுத்த அமைப்பு (ABS) இல்லாத நான்கு சக்கர வாகன உற்பத்தி / ஒன்றிணைப்பதற்காக 3 வருட சலுகைக் காலமொன்றை வழங்கல். |
| 7 | 2326/40 | 2023.04.06 | பால்மா மற்றும் சிவப்புப் பருப்பு, ஆவணங்களுக்கு எதிரான கொடுப்பனவு (DP) மற்றும் ஆவணங்களுக்கு எதிரான ஏற்பு (DA) ஆகிய கொடுப்பனவு முறைகளின் கீழ் இறக்குமதி செய்யும் போது புரொபோமா விலைப்பட்டியலில் முன் ஒப்புதல் பெறும் தேவையை நீக்குதல். |

| தொடர் இல | அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இல | திகதி | விபரம் |
|---|---|---|---|
| 8 | 2326/41 | 2023.04.06 | பிளாஸ்டிக்கிலான ஒரு முறை மாத்திரம் பயன்படுத்தப்படும் உறிஞ்சி குழாய்கள், கலக்கல் உபகரணங்கள், தட்டுக்கள், கோப்பைகள்(யோகட் கோப்பைகள் தவிர்ந்த), யோகட் கரண்டிகள் உட்பட கரண்டிகள், முட்கரண்டிகள் மற்றும் பிளாஸ்டிக் பூமாலைகள் மற்றும் பிளாஸ்டிக் இடியப்ப தட்டுகளை இறக்குமதி செய்வதை தடை செய்தல் |
| 9 | 2335/26 | 2023.06.09 | 2023 சனவரி 01 ஆம் திகதிய 2023 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதியினால் தற்காலிக இறக்குமதித் தடை விதிக்கப்பட்டிருந்த 1,218 இயைபு முறைக் குறியீட்டுப் பட்டியலில் இருந்து 286 இயைபு முறைக் குறியீடுகளை நீக்குதல். – (I கட்டம்) |
| 10 | 2336/45 | 2023.06.14 | கோதுமை மாவை இறக்குமதி உரிமக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரல். |
| 11 | 2341/38 | 2023.07.20 | • 2023 சனவரி 01 ஆம் திகதிய 2023 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதியினால் தற்காலிக இறக்குமதித் தடை விதிக்கப்பட்டிருந்த 1,218 இயைபு முறைக் குறியீட்டுப் பட்டியலில் இருந்து 327 இயைபு முறைக் குறியீடுகளை நீக்குதல். – (II கட்டம்)<br>• 2023 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதியினால் இதற்கு முன்னர் தடை செய்யப்பட்ட ஒரு முறை மாத்திரம் பயன்படுத்தக்கூடிய கரண்டிகள், முட்கரண்டிகள், கத்தி ஆகிய பிளாஸ்டிக் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு சர்வதேச விமான நிறுவனங்களின் பயணிகளுக்கு சேவை வழங்குவதற்கு பதிவு செய்யப்பட்ட உணவு சேவை வழங்குனர்களுக்கு அனுமதி வழங்குதல். |
| 12 | 2345/03 | 2023.08.14 | 2023 சனவரி 01 ஆம் திகதிய 2023 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதியினால் இறக்குமதி தற்காலிகத் தடை விதிக்கப்பட்டிருந்த, 25 இயைபு முறைக் குறியீடுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள வணிக நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும் வாகனங்களை (பஸ், லொறி, டிரக், தாங்கிகள், பவுசர்கள் மற்றும் விசேட நோக்கங்களுக்கான லொறி) இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்குதல். |
| 13 | 2347/08 | 2023.08.29 | கோதுமை மா உரிமக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்த, 2023 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதியை இரத்து செய்தல். |

| தொடர் இல | அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இல | திகதி | விபரம் |
|---|---|---|---|
| 14 | 2353/16 | 2023.10.09 | 2023 சனவரி 01 ஆம் திகதிய 2023 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதியினால் தற்காலிக இறக்குமதித் தடை விதிக்கப்பட்டிருந்த 1,218 இயைபு முறைக் குறியீட்டுப் பட்டியலில் இருந்து 299 இயைபு முறைக் குறியீடுகளை நீக்குதல். – (III கட்டம்)<br><br>மற்றும்<br><br>உள்நாட்டு விவசாயத்துறைக்கு பாதிப்போ இடையூறோ இன்றி விவசாயப் பொருட்களை இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமத்தின் கீழ் இறக்குமதி செய்வதற்கு வசதியளித்தல். |

### அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இல 2312/77 -2023.01.01

புதிய உற்பத்தி வழிகளை இனங்காணல் மற்றும் உலகளாவிய கவனத்தை ஈர்க்கும் சுற்றுச் சூழல் மற்றும் சமூகப் பிரச்சினைகளைப் பேசுதலினூடாக தற்போதைய வர்த்தகத்திற்கு இசைந்து போதல் போன்ற பிரதான அம்சங்களுடன் 2022 இல் உலக சுங்க நிறுவனத்தினால் இயைபு முறைக் குறியீடுகளின் (எச்.எஸ்) ஏழாவது பதிப்பு, அதாவது எச்.எஸ் 2022, அறிமுகப்படுத்தப்பட்டதுடன் அதற்கமைய புதிய வருமான பாதுகாப்பு உத்தரவுகள் மேம்படுத்தப்பட்டன. அதற்கமைவாக 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட கட்டுப்பாட்டுப் பட்டியல் (இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமம், இறக்குமதித் தடை, இறக்குமதி உரிம தற்காலிகத் தடை) புதுப்பிக்கப்பட்டு அவை ஒன்றிணைக்கப்பட்டன.

### அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இல 2312/78 -2023.01.01

புதிய உற்பத்தி வழிகளை இனங்காணல் மற்றும் உலகளாவிய கவனத்தை ஈர்க்கும் சுற்றுச் சூழல் மற்றும் சமூகப் பிரச்சினைகளைப் பேசுதலினூடாக தற்போதைய வர்த்தகத்திற்கு இசைந்து போதல் போன்ற பிரதான அம்சங்களுடன் 2022 இல் உலக சுங்க நிறுவனத்தினால் இயைபு முறைக் குறியீடுகளின் (எச்.எஸ்) ஏழாவது பதிப்பு, அதாவது எச்.எஸ் 2022, அறிமுகப்படுத்தப்பட்டதுடன் அதற்கமைய புதிய வருமான பாதுகாப்பு உத்தரவுகள் மேம்படுத்தப்பட்டன. அதற்கமைவாக 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட கட்டுப்பாட்டுப் பட்டியல் (தற்காலிக இறக்குமதித் தடை) புதுப்பிக்கப்பட்டு அவை ஒன்றிணைக்கப்பட்டன.

### அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இல 2315/46 - 2023.01.19

உள்நாட்டு சந்தையில் கோதுமை மாவின் விலையை நிலையாக நடத்திச் செல்வதற்காக, 2023 சனவரி 31 ஆம் திகதி வரை திறந்த கணக்கு கொடுப்பனவு முறையின் கீழ் கோதுமை மா இறக்குமதி செய்வதற்ககு அனுமதி வழங்குமாறு கோரி, வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட 2022 டிசம்பர் 30 ஆம் திகதிய 23/0006/627/001 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அமைச்சரவையினால் வழங்கப்பட்ட 2023.01.10 ஆம் திகதிய அனுமதிக்கமைவாக கோதுமை மா, திறந்த கணக்கு / பொருட்களை விற்பனை செய்த பின்னர் பணம் செலுத்தும் முறை ஆகிய கொடுப்பனவு முறைகளின் கீழ் இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்ட காலம் 2023 சனவரி 31 ஆம் திகதி வரை நீட்டிக்கப்பட்டது.

### அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இல 2320/46 - 2023.02.22

திருத்தம் செய்யப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 07 இலக்க கொடுப்பனவு முறைகள் தொடர்பான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளுக்கமைய திறந்த கணக்கு கொடுப்பனவு முறையைப் பயன்படுத்துவது, நேரடி / மறைமுக ஏற்றுமதியாளர்கள், உள்நாட்டு உற்பத்தியாளர்கள் மற்றும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் உள்ளிட்ட அரச நிறுவனங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், ஏற்றுமதியாளர்களுக்கு, இறக்குமதியாளர்களுக்கு மற்றும் கப்பல் போக்குவரத்திற்கு முனைய சேவை வழங்குவதனூடாக அந்நிய செலாவணி வருவாயை ஈட்டும் முனைய இயக்குனர்கள், முனைய பழுதுபார்த்தல், பராமரிப்பு மற்றும் வசதிகள் மேம்படுத்துவதற்கான உதிரிப் பாகங்கள், உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களை இறக்குமதி செய்யும் போது முகங்கொடுக்க நேரிடும் சிரமங்களை கருத்திற் கொண்டு, திறந்த கணக்கு கொடுப்பனவு முறையின் கீழ் அவ்வாறான பொருட்களை இறக்குமதி செய்தவற்கும் அவர்களது அந்நிய செலாவணி வருமானத்தை உபயோகித்து கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கும் வசதிகளை செய்வதற்காக துறைமுக, கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்டுள்ள பரிந்துரைக்கமைய அவற்றிற்கு அனுமதி வழங்கப்பட்டது.

மேலும், அனுமதிக்கும் செயற்பாட்டை துரிதப்படுத்தல் மற்றும் செயற்திறனற்ற நடவடிக்கைகளை தடுக்கும் நோக்கில் திறந்த கணக்கு கொடுப்பனவு முறையின் கீழ் அரசு அனுமதித்த வேலைத்திட்டங்கள் / அபிவிருத்தித் திட்டங்களுக்கு வேலைத்திட்டப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு பரிந்துரை வழங்கும் பொறுப்பை, மின்வலு, நீர், நெடுஞ்சாலைகள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

### அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இல 2320/47 - 2023.02.22

அழகுசாதனப் பொருட்களை இறக்குமதி செய்வது தற்காலிகமாக தடை செய்யப்பட்டுள்ளதுடன் பின்னர் அத்துறையைச் சேர்ந்தவர்களின் கோரிக்கைகளுக்கமைய அழகுசாதனப் பொருட்களை இறக்குமதி செய்வதற்காக (15 HS Codes) தேசிய மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகார சபையின் (NMRA) மற்றும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் (SLTDA) பரிந்துரையின் கீழ் அனுமதி வழங்கப்பட்டது. எவ்வாறாயினும், அழகுசாதன மற்றும் தனிநபர் பராமரிப்பு சேவை நிறுவனங்கள் தொடர்ந்து முன்வைத்த கோரிக்கைகள் மற்றும் பரிந்துரைகள் வழங்குதலின் போது NMRA மற்றும் SLTDA இற்கு காணப்படுகின்ற தடைகளைக் கருத்திற்கொண்டு, செய்யப்படுகின்ற அழகுசாதனப் பொருட்கள் இறக்குமதி, ஐந்து வருட சராசரியில் (சீ.ஐ.எப்) 50% இற்கு மட்டுப்படுத்தி ஒரு வருடத்திற்கு இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

### அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இல 2324/45 -2023.03.24

2019 சனவரி மாதம் 25 ஆம் திகதிய 2107/45 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2019 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளுக்கு அமைய, 87 இயைபு முறைக் குறியீட்டுத் தலைப்பின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள அனைத்து மோட்டார் வாகனங்களும் (நான்கு சக்கர வாகனங்கள் உள்ளிட்ட), அவ் ஒழுங்குவிதியில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளாறு வாகன வாயு வெளியேற்றத் தரநிலைகள் மற்றும் பாதுகாப்பு அளவீடு / தரநிலைகளுக்கு இணங்க வேண்டும். 2022 ஒக்டோபர் 10 ஆம் திகதிய 22/1653/617/013 ஆம் இலக்க மற்றும் "8703.21.63 மற்றும் 8703.21.72 எச்.எஸ். குறியீடுகளின் கீழ் பூட்டுதலில்லா நிறுத்த அமைப்பு (ABS) கவனத்திற் கொள்ளாது உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற நான்கு சக்கர வாகனங்களுக்கு உற்பத்தி வரிச் சலுகையை வழங்குதல்" எனும் தலைப்பில் அமைச்சரவைக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முன்மொழிவுகளுக்கு கைத்தொழில் அமைச்சரினால் அமைச்சரவை அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டிருப்பதோடு, இலங்கை சுங்கத்தின் உற்பத்தி பிணைப்பு வசதியின் கீழ், பூட்டுதலில்லா நிறுத்த அமைப்பு (ABS) இல்லாத நான்கு சக்கர வாகன உற்பத்தி / ஒன்றிணைப்பிற்காக 3 வருட சலுகைக் காலத்தை வழங்குவதற்கும் 2023 சனவரி மாதம் 01 ஆம் திகதிய 2312/75 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட வருமானப் பாதுகாப்பு உத்தரவினால் (RPO) இயைபு முறைக் குறியீடுகளின் திருத்தத்தின் படி (இயைபு முறைக் குறியீடு – 2022 ஆம் பதிப்பு) 2019 சனவரி மாதம் 25 ஆம் திகதிய 2107/45 ஆம்

இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட, மோட்டார் வாகனங்களுக்கான இயைபு முறைக் குறியீடுகள் புதுப்பிக்கப்பட்டன.

### அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இல 2326/40 - 2023.04.06

வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட 2022 ஆகஸ்ட் மாதம் 19 ஆம் திகதிய 22/1260/627/007 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முன்மொழிவுகளுக்கு அமைச்சரவையினால் வழங்கப்பட்ட அனுமதிக்கமைய பால்மா மற்றும் சிவப்புப் பருப்பு, ஆவணங்களுக்கு எதிரான கொடுப்பனவு (DP) மற்றும் ஆவணங்களுக்கு எதிரான ஏற்பு (DA) ஆகிய கொடுப்பனவு முறைகளின் கீழ் இறக்குமதி செய்தல், 2022 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கொடுப்பனவு முறைகளுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளில் 6 ஆம் இலக்க ஒழுங்குவிதியில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ள ஒப்புதல் பெறும் தேவையை நீக்குவதற்காக வழங்கப்பட்ட அனுமதி 2023 சனவரி 19 ஆம் திகதி 2315/46 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க கொடுப்பனவு முறைக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதியினால் நீக்கப்பட்டது. எவ்வாறாயினும், உள்நாட்டு சந்தைக்கு பால்மா மற்றும் சிவப்புப் பருப்பை தொடர்ச்சியாக வழங்குவதை உறுதிப்படுப்படுத்துவதற்காக மேற்குறிப்பிடப்பட்ட விடுவிப்பை தொடர்ச்சியாக நடத்திச் செல்வதற்கு கோரிக்கை விடுத்து அத்தியவசிய உணவுப் பொருட்கள் இறக்குமதியாளர்களினால் அது பற்றி வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சிற்கு விடயங்கள் முன்வைக்கப்பட்டு ஒப்புதல் பெறும் தேவை நீக்கப்பட்டது.

### அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இல 2326/41 - 2023.04.06

சுற்றாடல் அமைச்சினால், 2023 சனவரி மாதம் 31 ஆம் திகதிய 23/0265/622/003 ஆம் இலக்க "ஒரு முறை மாத்திரம் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் / பொலித்தீன் கழிவுகளைக் கட்டுப்படுத்தல்" எனும் தலைப்பில் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முன்மொழிவுகளுக்கு வழங்கப்பட்ட 2023.02.13 ஆம் திகதி அமைச்சரவை அனுமதிக்கமைய 2023 யூன் மாதம் 01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தும் வகையில், ஒரு முறை மாத்திரம் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் உறிஞ்சி குழாய்கள் மற்றும் கலக்கல் உபகரணங்கள், பிளாஸ்டிக்கினாலான ஒரு முறை மாத்திரம் பயன்படுத்தப்படும் தட்டுக்கள், கோப்பைகள் (யோகட் கோப்பை தவிர்ந்த), யோகட் கரண்டிகள் உட்பட கரண்டிகள், முட்கரண்டிகள் மற்றும் கத்திகள், பிளாஸ்டிக் மலர் மாலைகள் மற்றும் பிளாஸ்டிக் இடியப்பத் தட்டுக்களை இறக்குமதி செய்வதற்கு தடை விதிப்பதற்காக 2023 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதி வெளியிடப்பட்டது.

### அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இல 2335/26 -2023.06.09

சர்வதேச நாணய நிதியத்தினால் வழங்கப்படுகின்ற நீட்டிக்கப்பட்ட நிதியுதவி வசதித் திட்டத்திற்கு பங்களிக்கும் பொருளாதார மீட்சி மற்றும் தழுவும் நிகழ்ச்சித் திட்டத்தை அமைக்கும் போது, 2023 சனவரி 01 ஆம் திகதிய 2312/78 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள, 2023 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதியின் கீழ் காணப்படும் பொருட்கள் இறக்குமதிக்கான தற்காலிகத் தடையை தொடர்ந்து நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக, அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் உள்ளிட்ட உரிய தரப்பினரின் கவனம் செலுத்தப்பட்டதுடன், அதற்கமைய, 2023 ஏப்ரல் 06 மற்றும் 2023 மே 19 ஆகிய திகதிகளில் கைத்தொழில் அமைச்சு, இலங்கை மத்திய வங்கி மற்றும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் அலுவலர்களின் பங்குபற்றலுடன் வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களத்தில் நடைபெற்ற கூட்டங்களில் தற்போது நடைமுறையிலுள்ள பொருட்கள் இறக்குமதித் தற்காலிகத் தடை ஒழுங்குவிதிகளை தளர்த்துவதற்கு / அட்டவணையிலிருந்து பொருட்களை நீக்குவதற்கு உள்ள சாத்தியக்கூறுகள் பற்றி கலந்தாலோசிக்கப்பட்டது. மேலும், செலுத்த வேண்டிய கடன் (BOP) மீதான அழுத்தத்தைக் கருத்திற் கொண்டு மற்றும் அவற்றிற்கு முக்கியத்துவம் வழங்கி படிப்படியாக அக் கட்டுப்பாடுகளை / பொருட்கள் இறக்குமதிக்கான தற்காலிகத் தடையைத் தளர்த்துவது பற்றி பரிசீலணை செய்யுமாறு மத்திய வங்கி ஆளுநரினால் திறைசேரியின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டது. இப் பின்னணியில், தரப்பினரின் கோரிக்கைகள், வருடாந்த

இறக்குமதித் தொகை மற்றும் மாற்றீட்டிற்கான தேவையைக் கருத்திற் கொண்டு தற்காலிகத் தடை அட்டவணையின் 1,216 ஐக் கொண்ட இயைபு முறைக் குறியீட்டுப் பட்டியலிலிருந்து 286 இயைபு முறைக் குறியீடுகள் நீக்கப்பட்டன.

### அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இல 2336/45 -2023.06.14

ரூபாயின் பெறுமதி அதிகரித்தல் மற்றும் உள்நாட்டு சந்தையில் கோதுமை மாவின் விலைக்கான தாக்கத்தை கருத்திற் கொண்டு, ரூபாயின் பெறுமதி அதிகரிப்பின் பலனை நுகர்வோருக்கு வழங்குவதற்கான சாத்தியக்கூறு பற்றிய கலந்தாலோசிக்க 2023 மே மாதம் 31 மற்றும் 2023 யூன் மாதம் 06 ஆம் திகதிகளில் ஜனாதிபதி செயலகத்தில், ஜனாதிபதி சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் உள்ளிட்ட அலுவலர்கள் மற்றும் உள்நாட்டு கோதுமை மா உற்பத்தியாளர்களின் பங்குபற்றுதலில் கூட்டம் நடத்தப்பட்டதுடன் அங்கு சந்தை சமனின்மையை நீக்குவதற்கு கோதுமை மாவை நேரடியாக இறக்குமதி செய்வது குறுகிய காலத்திற்கு (இரண்டு மாதங்கள் தொடக்கம் மூன்று மாதங்கள் காலப்பகுதிக்கு) கட்டுப்படுத்துவதற்காக, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் கட்டுப்பாடுகளை விதிப்பதற்கும், கோதுமை மா இறக்குமதிக்கு பொருத்தமான விகிதத்தில் விசேட வர்த்தகப் பண்ட வரியை விதிப்பதன் மூலம் கோதுமை மா இறக்குமதி உரிமத்தை மீளமைப்பதற்கும் 2023 யூன் மாதம் 06 ஆம் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது. அதற்கமைய, கோதுமை மா இறக்குமதி உரிமக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது.

### அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இல 2341/38 -2023.07.20

இலங்கை மத்திய வங்கியின் ஆலோசனையின் படி நடத்தப்பட்ட கொள்கைக் கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட முன்மொழிவுகள் மற்றும் முடிவுகளுக்கமைய, வியாபார நடவடிக்கைகளுக்கு கிடைக்கும் உதவியின் முக்கியத்துவம் மற்றும் செலுத்த வேண்டிய கடன் தொகைக்கான (BOP) அழுத்தத்திற்கு முக்கியத்துவம் வழங்கி செலுத்த வேண்டிய தொகை (BOP) குறிப்பிட்டளவு குறையும் வரை பயணிகள் மோட்டார் வாகனங்கள் மற்றும் சில தெரிவு செய்யப்பட்ட பொருட்களுக்கான இறக்குமதிக் கட்டுப்பாடுகளை தொடர்ந்து நடைமுறைப்படுத்தும் அதேவேளை, 2023 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதி மூலம் விதிக்கப்பட்ட தற்காலிகத் தடை படிப்படியாக தளர்த்துவதற்கு முடிவெடுக்கப்பட்டது. இப் பின்னணியில், நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு, கைத்தொழில் அமைச்சு மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் தொழில்நுட்பக் குழுவினருடன் கலந்துரையாடி, அடையாளம் காணப்பட்ட 327 இயைபு முறைக் குறியீடுகள் தற்காலிகத் தடை அட்டவணையிலிருந்து நீக்கப்பட்டன.

அதேபோன்று, சர்வதேச விமான நிறுவனங்களின் பயணிகளுக்கு சேவை வழங்கும் நோக்கில், 2023 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதி மூலம் இதற்கு முன்னர் தடை செய்யப்பட்ட ஒரு முறை மாத்திரம் பயன்படுத்தப்படும் கரண்டிகள், முட்கரண்டிகள், கத்தி போன்ற பிளாஸ்டிக் உபகரணங்களை இறக்குமதி செய்வதற்கு பதிவு செய்யப்பட்ட உணவு வழங்குனர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

### அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இல 2345/03 -2023.08.14

கொவிட்-19 தொற்றுநோய் பரவல் காரணமாக நாணய மாற்று விகிதம் மற்றும் நிதி சந்தை மீது அதிகரிக்கும் அழுத்தத்தை தளர்த்துதலை நோக்காகக் கொண்டு, அரசின் கொள்கை ரீதியான நடவடிக்கையொன்றாக 2020 ஆம் ஆண்டிலிருந்து மோட்டார் வாகனங்கள் உள்ளிட்ட பல பொருட்களுக்கான இறக்குமதி தற்காலிகமாகத் தடை செய்யப்பட்டது. பொருளாதார வளர்ச்சி, கொள்கை ரீதியான மீளாய்வு உள்ளிட்ட இலங்கை மத்திய வங்கியின் ஆலோசனையைக் கருத்திற் கொண்டு செலுத்த வேண்டிய கடன் (BOP) மீதான அழுத்தத்தைக் கருத்திற் கொண்டு மற்றும் அவற்றிற்கு முக்கியத்துவம் வழங்கி பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் நடவடிக்கைகளுக்கு வசதிகளை வழங்குவதற்குத் தேவையான பொருட்களை இறக்குமதி செய்வதற்கு முக்கியத்துவம் வழங்கி, இவ் இறக்குமதிக் கட்டுப்பாடுகளை தளர்த்தும் நடவடிக்கை படிப்படியாக மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறான பின்னணியில், சுற்றுலாப் பயணிகளின் போக்குவரத்திற்காக பஸ் வண்டிகளை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறு ஜனாதிபதி செயலகத்தினால் நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சிடம் மற்றும் இலங்கை மத்திய வங்கியிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது. அதற்கமைய, நிதி,

பொருளாதார நிலைபேறு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சினால் இலங்கை மத்திய வங்கியின் கண்காணிப்பை அடிப்படையாகக் கொண்டு, 25 இயைபு முறைக் குறியீடுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள வணிக நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுகின்ற வாகன (பஸ், லொறி, டிரக், தாங்கிகள், பவுசர்கள் மற்றும் விசேட நோக்கங்களுக்கான லொறி) இறக்குமதிகளைத் தற்காலிகத் தடை அட்டவணையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.ஆனாலும் இவ் வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைச்சரவை அனுமதி வழங்காமையினால் 1969 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு சட்டத்தின் 20 ஆம் பிரிவின் படி சட்டத் தேவை பூர்த்தி செய்யப்பட்டதன் காரணமாக,அப் பிரிவின் பிரகாரம் வர்த்தமானி வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஒரு மாத காலத்திற்குள் வர்த்தமானி இரத்தாகியது.

**அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இல 2347/08 -2023.08.29**

கோதுமை மா இறக்குமதி செய்வதற்கு விதிக்கப்பட்டுள்ள இறக்குமதி உரிமக் கட்டுப்பாடுகளை நீக்குவது சம்பந்தமாக அரச நிதிக் குழுவின் ஆலோசனையையும் கருத்திற் கொண்டு நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சில் நடத்தப்பட்ட கூட்டத்தில், கோதுமை மா இறக்குமதியின் போது இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமத்தை நீக்குவதன் அடிப்படையில், கோதுமை தானிய இறக்குமதி சம்பந்தமாக சுங்க இறக்குமதி வரிச் சலுகை மற்றும் கோதுமை மா இறக்குமதி பற்றி சுங்க இறக்குமதி வரியைத் திருத்தம் செய்வதற்கும் முடிவெடுக்கப்பட்டது. அதன்படி, 2023 யூன் மாதம் 14 ஆம் திகதிய 2336/45 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதியின் மூலம் இரத்து செய்யப்பட்டது.

**அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இல 2353/16 - 2023.10.09**

2023 சனவரி 01 ஆம் திகதி 2312/78 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தற்காலிகத் தடையின் கீழ் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு விதிக்கப்பட்டுள்ள இறக்குமதிக் கட்டுப்பாடுகள், பொருளாதார செயற்பாடுகளுக்கு வழங்கப்படும் ஆதரவிற்கான முக்கியத்துவம் மற்றும் அக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதன் மூலம் ஏற்படும் கடன் மீதான அழுத்தத்தின் அடிப்படையில் தளர்த்துதலின் மூன்றாவது கட்டத்தின் கீழ் இறக்குமதித் தற்காலிகத் தடைப் பட்டியலிலிருந்து எஞ்சியுள்ள 299 இயைபு முறைக் குறியீடுகளை (மோட்டார் வாகனங்கள் தவிர்ந்த) நீக்குவதற்கு மற்றும் சுங்கவரி மதிப்பீடுகள் முடியும் வரி உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற தெரிவு செய்யப்பட்ட விவசாயப் பொருட்களுக்கு (25 இயைபு முறைக் குறியீடுகள்) இறக்குமதிக் உரிமக் கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டது.

### 2.1.2 செயற்பாட்டு ஆலோசனைகள் மற்றும் உள்ளகச் சுற்றறிக்கைகள் வெளியிடல்.

திணைக்களத்தினால் வருடத்திற்குள் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்களில் உள்ளடக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் தொடர்பில் இலங்கை சுங்கம், அனைத்து வணிக வங்கிகள் மற்றும் திணைக்கள உத்தியோகத்தர்களினதும் தெளிவு பெற்றிருப்பது மிக முக்கியமாகும்.

வர்த்தமானி அறிவித்தல்கள் வெளியிடப்பட்ட ஒவ்வொரு தடவையும் அதற்குரிய செயற்பாட்டு ஆலோசனைகளை வெளியிடுதல் மற்றும் உள்ளகச் சுற்றறிக்கைகளை வெளியிடுதல் திணைக்களத்தின் பிராதன பொறுப்பாகும். அதன் பிரகாரம், 2023 ஆம் ஆண்டு திணைக்களத்தின் மூலம் 10 செயற்பாட்டு ஆலோசனைகளையும் 19 உள்ளகச் சுற்றறிக்கைகளையும் வெளியிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

### 2.2 இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு உரிமங்களை வழங்குதல்

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தும் நிறுவனமொன்று என்ற வகையில் இத்திணைக்களத்தினால் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட பொருட்களுக்கு உரிமங்களை வழங்குவது பிரதான பணியாகும். அதற்கமைய, அப் பணியை முறையாகவும் வினைத்திறனாகவும் செய்து சேவைபெறுநர்களுக்கு தரமான சேவையொன்றை வழங்குவதற்கு இத்திணைக்களத்தில் 5 அலகுகள் நிறுவப்பட்டுள்ளதுடன், அவ் அலகுகளினால் உரிமங்கள் வழங்கப்படுகின்றன.

அதற்கமைய 2023 ஆம் ஆண்டில் ஒவ்வொரு அலகினாலும் வழங்கப்படுகின்ற இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு உரிமங்கள் பற்றிய தகவல்கள் கீழ்வருமாறாகும்.


### 2.2.1. அலகு 01 - ஒளடதங்கள் மற்றும் சத்திர சிகிச்சை உபகரணங்கள்

இறக்குமதி உரிமங்களை வழங்குவதற்கு ஒளடதங்கள் மற்றும் சத்திர சிகிச்சை உபகரணங்கள் பிரதானமாக ஐந்து தொகுதிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன், ஒவ்வொரு தொகுதியின் கீழும் 2023 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட உரிம எண்ணிக்கைகள் கீழே உள்ளவாறாகும்.

| இலக்கம் | விபரங்கள் | குழு | அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | மேற்கத்தேய ஒளடதங்கள் | 400 | 1365 |
| 2 | மிருக ஒளடதங்கள் | 410 | 309 |
| 3 | ஆயுர்வேத ஒளடதங்கள் | 420 | 179 |
| 4 | ஹோமியோபத்தி ஒளடதங்கள் | 430 | 14 |
| **5** | சிகிச்சை உபகரணங்கள் | 450 | 78 |
| **மொத்தம்** | | | **1945** |

2015 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபைச் சட்டத்தின் 109 ஆம் பிரிவிற்கமைய தேசிய ஒளடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற அனுமதியின் கீழ், ஒளடதங்கள் மற்றும் சிகிச்சை உபகரணங்களுக்கு இறக்குமதி உரிமங்களை வழங்குவதற்கு முன்னர் எடுக்க வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் சில மற்றும் இறக்குமதி உரிமங்களுக்கு உள்ளடக்க வேண்டிய விசேட நிபந்தனைகள் இப் பிரிவினால் இனங்காணப்பட்டுள்ளது. மேலும், 2023 ஆம் ஆண்டிற்கான கூட்டு இறக்குமதி உரிமப் பயன்பாடு தொடர்பான பின்னூட்டமொன்று பெற்றுக் கொள்ளப்படுவதுடன், வழங்கப்படுவதற்கான நிபந்தனை மதிப்பாய்வு மற்றும் தயார்படுத்தல் செய்யப்பட்டது.

**ஒளடதங்கள் மற்றும் சிகிச்சை உபகரணங்களுக்கு வழங்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கை**




### 2.2.2 அலகு 02 – பாவிக்கப்பட்ட வாகனங்கள் மற்றும் வாகன உதிரிப் பாகங்கள்

இவ் அலகினால் பயன்படுத்தப்பட்ட மோட்டார் வாகனங்கள் மற்றும் வாகன உதிரிப் பாகங்களுக்கு உரிமங்கள் வழங்குவதோடு 2023 ஆம் ஆண்டில் பின்வருமாறு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன.

| | விபரம் | குழு | அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | வெளிநாட்டுப் பணியாளர்களினால் வழங்கப்படுகின்ற நன்கொடைகள் | 110 | 02 |
| 2 | சமூக சேவை நிறுவனங்களின் நன்கொடைகள் | 150 | 07 |
| 3 | மோட்டார் ரைலர் (பயன்படுத்தப்பட்ட) | 185 | 02 |
| 4 | விவசாயத்துறைக்கான பயன்படுத்தப்பட்ட டிரக்டர் | 190 | 02 |
| 5 | ஆகாய விமானங்கள் மற்றும் ஹெலிகப்டர்களின் உதிரிப் பாகங்கள் | 210 | 96 |
| 6 | இயந்திரம் | 220 | 03 |
| 7 | வாகனங்கள் மற்றும் உதிரிப் பாகங்கள் | 225 | 05 |
| 8 | பொடி ஷெல் | 230 | 25 |
| 9 | பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் | 240 | 01 |
| 10 | மின் மோட்டார் சைக்கிள்கள் | 242 | 138 |
| 11 | சைக்கிள்கள் | 244 | 18 |
| 12 | தலைக்கவசம் | 245 | 21 |
| 13 | வாகன சட்டகம் (Chassis) | 290 | 59 |
| 14 | இருக்கைகள் (பயன்படுத்தப்பட்ட வாகன இருக்கைகள்) | 320 | 03 |
| 15 | பயன்படுத்தப்பட்ட உடைகள் | 720 | 03 |
| மொத்தம் | | | 385 |

### பயன்படுத்திய வாகனங்கள் மற்றும் வாகன உதிரிப்பாகங்களுக்கு வழங்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கை




### 2.2.3. அலகு 3 - இரசாயனங்கள், உரங்கள், பூச்சிக்கொல்லிகள் மற்றும் தொழில்துறை பொருட்கள்

2023 ஆம் ஆண்டில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட இரசாயனங்கள், உரங்கள், பூச்சிக்கொல்லிகள் மற்றும் தொழில்துறை மூலப்பொருட்களுக்கு வழங்கப்பட்ட உரிமங்களின் விவரங்கள் பின்வருமாறு.

| | விபரங்கள் | குழு | உரிமங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | முன்னோடி இரசாயனப் பொருட்கள் மற்றும் இரசாயனப் பொருட்கள் | 500 | 508 |
| 2 | பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் | 510 | 1075 |
| 3 | விவசாய இரசாயனங்கள் தவிர்ந்த ஏனைய இரசாயனப் பொருட்கள், பூச்சிக்கொல்லிகள் | 520 | 1743 |
| 4 | கதிரியக்க பொருட்கள் | 530 | 253 |
| 5 | மது | 540 | 250 |
| 6 | கழிவு எண்ணெய் | 700 | 0 |
| 7 | உலோகங்கள், உலோகத் துணிக்கைகள் ஏற்றுமதி | 710 | 213 |
| 8 | உலோகங்கள், உலோகத் துணிக்கைகள் இறக்குமதி | 715 | 168 |
| 9 | சேதனக் கழிவுகள் | 735 | 46 |
| **மொத்தம்** | | | **4256** |

**இரசாயன பொருட்கள், உரங்கள், பூச்சிக்கொல்லிகள் மற்றும் கைத்தொழில்துறை மூலப்பொருட்களுக்கு வழங்கப்பட்ட உரிமங்கள்**




### 2.2.4 அலகு 04 - கையடக்க தொலைபேசிகள் மற்றும் தொடர்பு சாதனங்கள் மற்றும் பிற

2023 ஆம் ஆண்டில் கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் தொடர்பாடல் உபகரணங்களுக்கான இறக்குமதி உரிமங்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

| இல | விபரங்கள் | குழு | உரிமங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | கையடக்கத் தொலைபேசி (பயன்படுத்தப்பட்ட/புதிய) | 615 | 3128 |
| 2 | தொலைத்தொடர்பு உபகரணங்கள் | 620 | 1175 |
| 3 | குளிரூட்டல் வாயுக்கள் | 640 | 99 |
| 4 | குளிரூட்டிகள் | 645 | 228 |
| 5 | அச்சு இயந்திரங்கள் | 690 | 142 |
| 6 | தூர இயக்கியின் மூலம் செயற்படுகின்ற விளையாட்டுப் பொருட்கள் | 660 | 74 |
| 7 | பயன்படுத்தப்பட்ட குளிர்சாதனப் பெட்டிகள், பயன்படுத்தப்பட்ட குளிரூட்டிகள் | 630 | 01 |
| 8 | சூடாக்கும் பம்பி | 631 | 10 |
| 9 | மின் செருகிகள் மற்றும் கெவேனிகள் | 655 | 65 |
| 10 | கணினிகள் | 625 | 09 |
| 11 | வெட்டப்பட்ட பலகை மற்றும் மரக் குற்றிகள் | 602 | 65 |
| 12 | தந்தம் மற்றும் தந்தத்துடனான பொருட்கள் | 603 | 00 |
| 13 | வெடிபொருட்கள் மற்றும் ஆயுதங்கள் | 600 | 153 |
| 14 | சிகரெட் தாள்கள் | 670 | 49 |
| 15 | ஏற்றுமதி | 605 | 00 |
| 16 | நாணயங்கள் | 610 | 00 |
| 17 | பயன்படுத்தப்பட்ட சலவை இயந்திரங்கள் | 635 | 00 |
| 18 | வட்டுக்களினால் இயக்கப்படும் விளையாட்டு உபகரணங்கள் மற்றும் நாணயத்தால் இயக்கப்படும் விளையாட்டு உபகரணங்கள் | 650 | 00 |
| 19 | பயன்படுத்தப்பட்ட வீட்டு உபகரணங்கள் | 680 | 03 |
| 20 | வாள்கள் (சர்கியுலர் வாள்கள் / ஜிட் வாள்கள்) | 685 | 17 |
| 21 | வானிலை பலூன்கள் | 695 | 00 |
| | **மொத்தம்** | | **5218** |

### கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் தொடர்பாடல் உபகரணங்களுக்கு வழங்கப்பட்ட உரிமங்கள்




### 2.2.5 அலகு 5 – விலங்கு, விலங்கு உற்பத்திகள் மற்றும் ஏனைய இறக்குமதிகள்

பிற இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகளுக்கு கீழ் வருமாறு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன.


| இல | விபரங்கள் | குழு | அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | விலங்கு மற்றும் விலங்குப் பொருட்கள் | 550 | 1642 |
| 2 | உப்பு | 505 | 26 |
| 3 | சீனி | 515 | 07 |
| 4 | உறைந்த மீன் | 555 | 293 |
| 5 | உறைந்த கணவாய் | 556 | 00 |
| 6 | தோல் நீக்கப்படாத மரமுந்திரிகை | 560 | 01 |
| 7 | தானிய வகைகள் | 570 | 193 |
| 8 | அரிசி | 572 | 120 |
| 9 | சக்தியளிக்கும் பானங்கள் | 575 | 51 |
| 10 | தேயிலை | 580 | 500 |
| 11 | பாம் ஒலின் மற்றும் பாம் ஸ்டெரின் | 750 | 54 |
| 12 | தங்கம் | 760 | 37 |
| 13 | தயாரிக்கப்பட்ட மா மற்றும் மால்ட் | 815 | 358 |
| | **மொத்தம்** | | **3282** |

#### பிற இறக்குமதிகளுக்காக வழங்கப்பட்ட உரிமங்கள்




### 2.2.6 2023 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதி உரிமங்கள் - மாதாந்தம்

| மாதம் | அலகு 01 | அலகு 02 | அலகு 03 | அலகு 04 | அலகு 05 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 227 | 39 | 303 | 254 | 261 | 1,084 |
| பெப்ரவரி | 197 | 34 | 343 | 255 | 195 | 1,024 |
| மார்ச் | 171 | 23 | 364 | 383 | 204 | 1,145 |
| ஏப்ரல் | 81 | 17 | 259 | 363 | 129 | 849 |
| மே | 138 | 24 | 347 | 382 | 225 | 1,116 |
| யூன் | 197 | 17 | 366 | 492 | 340 | 1,412 |
| யூலை | 155 | 39 | 344 | 480 | 437 | 1,455 |
| ஆகஸ்ட் | 150 | 36 | 373 | 491 | 339 | 1,389 |
| செப்டெம்பர் | 161 | 36 | 360 | 482 | 329 | 1,368 |
| ஒக்டோபர் | 118 | 36 | 390 | 715 | 327 | 1,586 |
| நவம்பர் | 129 | 63 | 462 | 571 | 288 | 1,513 |
| டிசம்பர் | 221 | 21 | 345 | 350 | 208 | 1,145 |
